மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பெண்களை பேய் பிடிப்பதாகத்தான் வரலாறு இருக்கிறது. இருந்தாலும் இந்த அரசு இரக்கம் கொண்டு, விரைவில் தகுந்த பரிகாரம் காண இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டம்.

*வினா எண். 590—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் 'கொத்தடிமை விடுவிப்பு' திட்டத்தின் கீழ் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

தருமபுரி மாவட்டத்தில் ''கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தின்'' கீழ் விடுவிக்கப்பட்டு பலன் அடைந்தோர் 34 பேராவர்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுவிக்கும் முறை யாரால் எப்போது கொண்டுவரப்பட்டது? அப்படி கொத்தடிமை விடுப்பு முறையினால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்தெந்த வகையில் சலுகை அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1975–76ல் மத்திய அரசாங்கத்தில் அப்போது பிரதம அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையாரால் கொண்டு வரப்பட்டது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு விவசாயத்திற்கு நிலம் வழங்குதல், வீடு கட்ட உதவி அளித்தல், விவசாய நிலங்களை மேம்பாடு செய்வதற்கு மற்றும் உழவுத் தொழில் செய்வதற்கு கடன் வழங்குதல், இடைக்கால நிவாரணம் வழங்குதல் இப்படிப்பட்ட உதவிகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த கொத்தடிமை விடுப்பு தர்மபுரி மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது? சித்தேரி மலை, கொத்தளம் பகுதிகளில் இருக்கிறதா? அங்கிருந்து விடுவிக்கப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன.

1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா 591 மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 591, 592 இரண்டும் தொடர்புடையதாக இருப்பதால் இந்த இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

வீராணம் ஏரி கால்வாய்கள்.

*வினா எண். 591—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் ஏரி பாசனத்தில் மாதிரி சிமிண்ட் வாய்க்கால் கட்டி தண்ணீர் வீண்விரயம் இல்லாமல் பாசனம் செய்ய அரசு திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். வீராணம் ஏரி வாய்க்கால்களான லால்பேட்டை வாய்க்கால், வெள்ளியக்குடி வாய்க்கால் ஆகிய இரண்டையும் சீர்ப்படுத்தும் முன்னோடி திட்டத்திற்கு (Pilot Scheme) ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

*வினா எண். 592—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப்பட்டது?

(ஆ) எப்போது இத் திட்டம் முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டத்தின் மதிப்பீடு ரூ 8.10 இலட்சம் ஆகும்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு கோடை மூடு காலத்தில் பெரும் பகுதி வேலைகள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நந்தன் கால்வாய் திட்டம்.

*வினா எண். 593—திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியில் நந்தன் கால்வாய் திட்டத்தில் பனைமலை ஏரிவரை கால்வாய் வெட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?